# நரியின் தந்திரம்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# நரியின் தந்திரம்





ஓர் அடர்ந்த காட்டில் பல விலங்குகள் வாழ்ந்து வந்தன. ஒருநாள் குள்ளநரிக்கு அதிக தாகம் எடுத்தது. காட்டில் தண்ணீரைத் தேடி அலைந்து கிராமத்திற்குள் வந்துவிட்டது. அங்கு ஒரு தொட்டியைப் பார்த்து, அதில் உள்ள தண்ணீரைக் குடிக்க முயன்று தவறி தொட்டிக்குள் விழுந்து விட்டது. குள்ளநரி தொட்டியை விட்டு வெளியே வந்ததும் உடல் முழுவதும் நீல நிறச் சாயம் ஒட்டிக் கொண்டது.



நரிக்கு ஒன்றும் புரியவில்லை. வேகமாக காட்டிற்கு சென்றது. நரியின் தோற்றத்தைப் பார்த்த மற்ற விலங்குகள் பயந்து நடுங்கின. நரிக்கு மிகுந்த மகிழ்ச்சி, “இனி நான் தான் காட்டுக்கு ராஜா” என்று கூறியது. மற்ற விலங்குகளும் நரி நீலநிறத்தில் வித்தியாசமாக இருப்பதைக் கண்டு, நரியை ராஜா என ஏற்றுக்கொண்டன.



நரியும் மற்ற விலங்குகளைத் தனக்குத் தேவையான அனைத்தையும் கொண்டு வருமாறு கூறியது. அனைத்து விலங்குகளும் நரிக்குத் தேவையான உணவுகளை எடுத்து வந்தன. நாட்கள் சென்றன. ஒரு நாள் மழை பெய்தது. மழை நீரில் குள்ளநரியின் சாயம் வெளுத்தது.



உண்மையான தோற்றத்தைப் பார்த்த மற்ற விலங்குகள் அதிர்ச்சி அடைந்தன. இத்தனை நாட்கள் தங்களை ஏமாற்றிய நரியின் மேல் கோபம் கொண்டன. அனைத்து விலங்குகளும் ஒன்று சேர்ந்து நரியைக் காட்டை விட்டு விரட்டின.



# கதையின் நீதி

நாம் செய்த தவறு ஒரு நாள் வெளிப்படும்.

# நாம் செய்த தவறு ஒரு நாள் வெளிப்படும்.

